முதலில் நினைத்தோம். பிறகு, interior–ஆகவும் பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லி, தற்போது முழுமையாக, interior பகுதிகளிலும் check செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அதேபோல, இங்கே நாம் அமர்ந்து இருக்கக்கூடிய சட்டமன்றம் மட்டுமல்ல; மெரினா பீச், கோயில்கள், பூங்காக்கள் போன்ற எல்லா இடங்களிலும் கூடுதலாக துறையின் பணியாளர்களைப் போட்டு, அவர்கள் எல்லோருமே கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். அதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, இன்றைக்கு சென்னை மாநகராட்சியில் மட்டுமல்ல; அனைத்து நகராட்சி, உள்ளாட்சி அமைப்புகளிலும் கூடுதலாகப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் எல்லா இடங்களுக்கும் சென்று, வேகமாக கிருமி நாசினி மருந்துகளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மற்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆகியோருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

விருதுநகர் மாவட்டம், சிப்பிப்பாறை கிராமம், பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தினால் 9 பேர் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு. விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், சிப்பிப்பாறை கிராமத்தில் உள்ள பட்டாசுத் தயாரிக்கும் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்குவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. M.S.R. ராஜவர்மன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்களும், விதி 55–ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக நான் எடுத்துக்கொள்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதனைக் கொண்டுவரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. M.S.R. ராஜவர்மன் அவர்கள்.

திரு. M.S.R. ராஜவர்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூர் தொகுதி, வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிப்பிப்பாறை கிராமத்தில் Rajammal Fire Works என்ற நிறுவனத்தில் நடந்த விபத்து குறித்து இந்த அவையின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், சிப்பிப்பாறையில் இயங்கக்கூடிய Rajammal Fire Works–ல் நேற்று ஏற்பட்ட பெரிய வெடி விபத்தில், 6 பெண்கள்உள்படபேர்பலியானார்கள்என்றதகவல்வந்திருக்கின்றது. அதேபோல, நிறையபேர் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலை சாதாரண ரக பட்டாசுகள் தயாரிப்பதற்கென்று அனுமதியைப் பெற்றுவிட்டு, fancy ரக பட்டாசுகளை உற்பத்தி செய்வதாக தகவல்கள் வந்திருக்கின்றன. எனவே, நான், இந்த விபத்து குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஏனென்றால், உயிரிழந்திருக்கக்கூடியவர்கள் அனைவருமே ஒரு பெரிய அளவிலான குடும்பத்திற்கு வாழ்வாதாரமாக விளங்கியிருக்கின்றார்கள். அவர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் அவர்கள் இருந்திருக்கிற காரணத்தினால், உயிரிழந்திருக்கக் கூடியவர்களின் குடும்பத்திற்கு தலா 20 இலட்சம் ரூபாயை நீங்கள் சிறப்பு நிவாரணமாக வழங்கிட வேண்டும். அதேபோன்று, காயமுற்றவர்களுக்கும் உரிய இழப்பீடு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி விதிகளை மீறி நடைபெறக்கூடிய பட்டாசு ஆலைகள்மீதும் உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டு, நான் அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், சிப்பிப்பாறை கிராமத்தில் இயங்கி வந்த பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலையில், 20–3–2020 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஜெயமுருகன் என்பவரின் மனைவி திருமதி ராணி, திரு. கணேசன் என்பவரின் மனைவி திருமதி தாமரைச் செல்வி, திரு. முப்பிடாரி என்பவரின் மனைவி திருமதி தங்கம்மாள், திரு. ஜெயக்குமார் என்பவரின் மனைவி

திருமதி ஜெயபாரதி, திரு. முத்துக்கனி என்பவரின் மனைவி திருமதி பத்ரகாளி, திரு. செல்வக்குமார் என்பவரின் மனைவி திருமதி வேலுத்தாய், திரு. முருகையா, திரு. ரங்கசாமி நாயக்கர் என்பவரின் மனைவி திருமதி காளியம்மாள் மற்றும் திரு. குருசாமி ஆகிய ஒன்பது நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியினை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்துள்ளேன். இந்தத் துயர சம்பவத்தில் அகால மரணமடைந்தோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், அந்தப் பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 நபர்கள் காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து, நான் மிகவும் வருத்தமடைந்துள்ளேன். காயமடைந்தவர்கள் அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க வேண்டுமென்று மருத்துவமனை அதிகாரிகளுக்கும், விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து, வீடு திரும்ப வேண்டுமென்று என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலைகள், மிகுந்த எச்சரிக்கையுடனும், பாதுகாப்புடனும், பட்டாசு தயாரிக்கும் தொழிலை மேற்கொள்ள வேண்டுமென இந்தத் தருணத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, இந்தப் பட்டாசுத் தொழிற்சாலை உரிமம் இல்லாமல் செயல்படுவதாக இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். இதுகுறித்து காவல் துறையால் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே, அப்படி ஏதாவது விதிமீறல்கள் இருந்தால், உரிய முறையிலே அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துயர சம்பவத்தில் உயிரிழந்த 9 நபர்களின் குடும்பங்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்குத் தலா 50,000 ரூபாயும், இலேசான காயமடைந்தவர்களுக்குத் தலா 25,000 ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன்.